# வேளாளன்.

தூத்துக்குடி.

ஆசிரியன்:— மூ. பொன்னம்பலம்.

வயது 1] 1104-ரு சுக்ல-௵ ஆடி 6-உ [மாதம் 4


"அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கிவிட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே."

## நாட்டு இயல்பு அறியா நம்மறபினர்

தற்கால அரசியல் நிலைமையில் நம்நாட்டில் ஒவ்வொரு சமூகத்தினரும் நல்வாழ்க்கையின் பொருட்டு சங்கங்களும் பத்திரிகைகளும நடத்தி நன்னிலையடைந்து வருகின்றனர். இதனையறிந்த நம்மக்களும் சங்கம அமைத்தனர். நாமும வேளாளனை ஆரம்பித்து நடத்தி வருகின்றோம். நமது வேளாளன் பிறரும் விரும்பும வகையில் வெளிவருகின்றான். பிறதேசியப் பத்திரிகைகள்கூட சிறப்பாக வேளாளரும பொதுவாகத் தமிழ்மக்களும் ஆதரிக்கத்தக்கது எனமதிப்புரைகள் வரைந்திருக்கின்றன. பிறசமூகமக்களும நமது வேளாளனை விரும்பி வாங்குகின்றனர்.

இந்நிலைமையில் உலகியல் அறியா உத்தமர்—தேசபக்தர்—நமது நண்பர், திரு. பொ. திருகூடசுந்தரம் பிள்ளையவர்கள், "வேளாளன்" எதற்கு? என ஒரு கட்டுரை எதிர்மறைப் பொருளுடன் ஆ

னந்தபோதினி வாரப்பதிப்பில் வாரசாரப்பகுதியில்எழுதி சென்ற வைகாசிமீ 9உ வெளிவரச்செய்திருப்பதாகத்தெரிகிறது. பிள்ளையவர்கள் நமது வேளாளனில் வெளியிடவேணுமென முயன்றார். முயற்சி முற்றுப்பெறவில்லை. பிள்ளையவர்கள் தெளிந்த மனமுடையவராக விருந்தால் தம் பெயருடன் வெளியிட்டிருக்க வேண்டும். தம்பெயரின்றி வெளியிடக்கருதி ஆனந்தபோதினிப்பத்திராதிபரை வாரசாரப் பகுதியில் வெளியிடச்செய்தது வெறுக்கத்தக்கதாகும்.

நம் நாட்டில் பல்லாண்டுகளாக பல சமுகப்பத்திரிகைகள் நடந்துவர பல தேசபக்தர்களும் பார்த்துக் கொண்டிருக்க தற்பொழுது நமது வேளாளனை மட்டும், அனுவசியமானது என்று கூறியதோடு அமையாது கேடுவிளைவிப் பதாகுமெனக்கூறி யிருக்கிறார் நமது பிள்ளையவர்கள். இவரினும் அரசியற்றுறையில் அறிவு முதிர்ந்தோர் அநேகர் இருக்க இவர்மட்டும் பயனற்றவாறு பகர்வானேன். இவர் உண்மையாகச் சமுகப்பத்திரிகைகளையும், சமுகச்சங்கங்களையும், உதறித்தள்ளுபவராகவிருந்தால் பொதுப்படச் சமுகக்கிளர்ச்சிக்கான சங்கங்களும், பத்திரிகைகளும், தேச முன்னேற்றத்திற்குத்தடையாகின்றன என எழுதியிருக்கலாம். அல்லது இதன் முன் தோன்றிய பிறசமுகப் பத்திரிகைகளைப்பற்றி எழுதியிருக்கலாம். இம்முறைகளில் ஒன்றையும் கைக்கொள்ளாது நமது வேளாளனை மட்டும் கைவைத்துப் பார்ப்பதன் காரணம் யாதெனயாம் அறிவதற்கில்லை.

ஆண்டு பலவாக அரசியற்றுறையில் அரும்பர்டுபடும் பிள்ளையவர்கள் பிறசமுகப் பத்திரிகைகளைப்பற்றி எழுதினால் பிறசமுக மக்கள் சும்மாவிடமாட்டார்கள் எனப்பயந்து பதுங்கியிருந்தாரா? பிறசமுகப் பத்திரிகைகள் நாட்டில் நடை பெறுவதையறியாதிருந்தாரா? சமுகப்பத்திரிகைகள்தேசமுன்னேற்றத்திற்குத்தீங்குவிளைவிக்குமென்பதை இதுவரையறியாது இப்பொழுதுதான் அறிந்தாரா? பிறசமுகங்களுக்குப் பத்திரிகைஅவசியமென்றும் வேளாளருக்கு அவசியமில்லையென்றும் கருதுகின்றனரா? பிறசமுகப்பத்திரி

கைகள் தேசமுன்னேற்றத்திற்குத் தீங்கில்லையென்றும் வேளாளர் சமுகப்பத்திரிகையே தீங்கென்றும் கருதுகின்றனரா? "ஊருக்கெளியவன் யார்? பிள்ளையார் கோவில் ஆண்டி" என்பதுபோல் சமுகப்பத்திரிகைகளும் சமயப்பத்திரிகைகளும் தேசமுன்னேற்றத்திற்குத் தீங்கென்று தெரிந்திருந்தும் வேளாளன் வெளிவருவதை எதிர்பார்த்துக் கொண்டிருந்து வேளாளன் எதற்கு என விளம்பினால் வேளாளர் தாங்கிக்கொண்டிருப்பர்; தாம் தாக்குதலின்றி தப்பிக்கொள்ளலாம் என நினைத்தே பிள்ளையவர்கள் எழுதியிருக்கவேண்டுமென எண்ணுகின்றோம்.

நாட்டியல்பு அறியா நம்பிள்ளையவர்கள் வேளாளர் சமுகம் தற்பொழுது என்ன நிலைமையிலிருக்கின்றது என்று எவ்விதம் அறிவர். இதன்முன் வேளாளர் இருந்ததுபோல் இனி இத்தகைய இழிவுகளுக்கு இடங்கொடுத்துக் கொண்டிருக்க மாட்டார்களென அறிதல் அவசியம். நாம் "வேளாளன்" எதற்கு? என்றுள்ள கட்டுரையைக் காணுவதற்குள் பலர் நமக்குமிக ஆர்வத்துடன் மறப்பெழுதி வெளியிட விரும்பினர். "சிவநேசன்" பத்திரிகையில் "வேளாளன் வேண்டத்தக்கது" என்ற கட்டுரையொன்று வெளிவந்திருக்கிறது. அதனையும் மற்றொருபத்தியில் வெளியிட்டிருக்கின்றோம்.

இனி சமுகமுன்னேற்றம் தேசமுன்னேற்றத்திற்கு இடையூறா? என்பதைப்பற்றி சிறிது ஆராய்வோம். ஒருஉடலுக்குப் பலவுறுப்புக்கள் உளது. பல உறுப்புக்களாலாக்கப் பெற்றதே உடல். உடலைத்தாங்கும் உயிருக்கு உடல் உறுப்புக்களில் பழுது ஏற்பட்டால் பலஇடையூறுகள் ஏற்படுதலுமன்றி பழிக்கப்படுதலுமாகும். ஆகவே உடலையுடைய உயிர் உடலின் அமைந்துள்ள ஒருசிறு உறுப்பும் பழுதுபடாமல் காத்தல் அவசியமாதல்போல் தேசமாகிய உடலைத்தாங்கிநிற்கும் மக்களாகியவுயிர் சமுகமாகிய உறுப்புக்களை பழுதுபடாமலும் செம்மை பெறவும் செய்யவேண்டுவதவசியம். இன்றேல் உறுப்புக்குறைந்த உடலைக்கொண்டு உருவான வேலையொன்றுஞ்செய்ப இயலாதவாறு போல் சமுகமுன்னேற்றமடை

யாமல் தேசமுன்னேற்றமடைய இயலாது. ஆனால் ஈண்டு ஒன்று கவனிக்கத்தக்கது. சமூகமுன்னேற்றமென்றால் ஒவ்வொரு சமூக மக்களும் தொழில்த்துறைகளில் முன்னேற்றமடைய முற்படுவது போல் பிறரும் முன்னேற்றமடைவதில் பொறாமை கொள்ளாது மகிழ்ச்சியடைதல் வேண்டும். முன்னேற்றத்தில் செருக்கில்லாதிருத்தல்மிக அவசியமாகுமெனத்தெரிவிக்கிறோம். நாமும்நமது வேளாளனை இவ்வழியில்த்தான் நடத்துகின்றோம். நமது வேளாளனை நம்சமூகமக்கள் மட்டுமின்றி பிறரும் வாங்குகின்றனர். பிறரும் வாங்குவதற்குப் பொருத்தமுடையது வேளாளன் என பல தேசியப்பத்திரிகைகளும் மதிப்புரை எழுதியிருக்க நமது பிள்ளையவாகள் மட்டும் மாறுபட எழுதியிருப்பது அவர்களின் நாட்டியல்பறியாத்தன்மையை நன்கு விளக்கிக் காட்டுகின்றது.

இனியேனும் நமது பிள்ளையவர்கள் இத்தகைய வேண்டாத வேலைகளில் தலையிட்டுத்தடுமாராமல் வேண்டத்தக்க வேலைகளில் முன்னின்று முயல்வாராக. ஒவ்வொரு சமூகமும் தனித்தனியே முன்னேறும் வகையில் முனைந்து வேலைசெய்து முன்னேறிவிட்டால் தேசமுன்னேற்றஞ் செய்ய முனைந்து வேலை செய்யும் தேசபக்தர்களுக்கு அதிக வேலையிரா தென்பதையும் தங்கள் வேலைகளின் ஒருபகுதியைச் சமூகமுன்னேற்றக்காரர்கள் ஏற்றுக்கொள்ளுகின்றனரென்பதையும் சமூகமுன்னேற்றம் தேசமுன்னேற்றத்தின் ஒருபகுதி என்பதையும் சமூகமுன்னேற்றமின்றி தேசமுன்னேற்றமில்லை என்பதையும் திடம்பெறத் தெரிவாராக.

---

## சிக்கனவாழ்வே சிறந்த வாழ்வு.

பேட்டை. திரு. வா. இராமலிங்கம் பிள்ளையவர்கள்.

இவ்வுலகில் நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு குடும்பத்தைத்தாங்கி நடைபெறச்செய்தல் அவசியமாகின்றது அவ்வாறு செய்வதில் வாழ்க்கைப்பயனை வழுவின்றி ஆய்ந்து உரியமுறைத்தழுவி ஒழுகலே கடமையாகும். உரியமுறையாவது இல்வாழ்

"தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தானென்றாங்கு ஐம்புலத்தாறோம்பல் தலை." என்ற குறள்களின் கருத்துக்கிணைய, பிரம்மச்சாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி என்பாருக்கும், பிதிரர், தேவர் விருந்தினர் சுற்றத்தார் என்பாருக்கும் இயன்றவாறு உதவித்தாலும் இறம்பட வாழ்தலையாம். இவ்வாறாயவாழ்க்கைநடத்துதற்கு ஏதுவாயுள்ளது பொருள். "பொருள்தனைப் போற்றிவாழ்" என்ற முதுமொழி இதுபற்றியே எழுந்ததாகும். அன்றியும், "அருளில்லார்க்கவ்வுலகமில்லை பொருளில்லார்க் கிவ்வுலகமில்லாதியாங்கு." என்ற தேவர் திருவாக்காலும் இனிய வாழ்க்கைக்குப் பொருள் எத்துணையவசியமென்பது பெறப்படுகின்றது. இத்தகைய பொருள் ஈட்டும் முறைபலவாகும். எம்முறையேனும் தீயதில்லா நன்முறையே சிறந்தது. விரிக்கிற்பெருகுமாதலின், விடுத்து ஈட்டியபொருளைப் போற்றுவது குறித்துணர்வாம்.

பொருளைப் போற்றுவதற்கு ஒவ்வொருவரும் தம்தம் உணவு உடை முதலியவற்றை அவ்வவற்றின் அவசியத்தைமட்டும் காக்கும் தன்மையதாக அமைத்துக்கொள்ள வேண்டும். பிறர் தன்னைத் தகுதிக்கு மிஞ்சி மதிக்க வேண்டுமென்ற இடம்பமின்றித் தன்தகுதியளவில் கொள்ளல் சாலுமெனக் கருதவேண்டும். கொடையும் இம்மை அண்டினோர்க்கு எம்மட்டில் உதவஇயலுமோ அம்மட்டில் அளவுவது பொருந்தும். "வருவாயுட்கால் வழங்கி வாழ்வதே, மறுமையிலாளர் தொடர்பு." என்றபடி வருமானத்தில் கால் பங்கு கொடையில் செலுத்தலாகும். அன்றி மிகுபுகழ்கருதி மேன்மையற்ற இடம்பச் செய்கைகளிலும் அளவற்ற முறையிலும் செலவிடில் வறுமைமிகுந்துவாட்டமுறவே நேரும். ஆகவே இதுபற்றி நாம் உணரத்தக்கது இக்காலத்திய மயக்கமான ஆடையின் தன்மை அனுவளவுமில்லாத, மெல்லிய உடைகளை ஆசைமிகுதியால் அளவற்ற பொருள் கொடுத்து வாங்கியணிவதை விலக்கவேண்டுவது. அவை அடுத்தடுத்துக் கெடுவதால் அடிக்கடி பொருள் கொடுத்துக் கொடுத்து வாங்க நேர்கிறது. அவற்றை வாங்கி உடுத்தி ஏங்கி ஏங்கித் திரிவதால் ஓங்கும் பொருள் குன்றித்தாங் குறுகின்றோம் என்பது.

"கட்டியான காட்டுடையைத்திட்டமுடன் பெற்றுடுத்தில் உற்றபொருள் குறைவுறாது மற்றுமான பங்கமின்றி மகிழ்வுடனு லவலாம் ஓங்குபுகழ் மிகுதியுண்டு உன்னாட்டுச் சோதாரும் உழைப்பின்றி வருந்தார்" இச்செய்யுளால் விளங்குகின்றது.

இனி உணவு முறையுமிவ்வாறே; கண்ட கண்ட நேரம் காபி, டீ, குடித்து உடல் நலங்கெடுத்தும் பொருள் செலவிடுத்தும் பிணி பல எய்த, பின் வைத்தியரை அடுத்தும் பெற்ற பொருள் கொடுத்தும் உற்ற நோய் தீராதுழல்வதொழிக்க வேண்டும். முற்ற நல்லுணவு அற்றதறிந்து அளவறிந்து உற்றவேளை உண்டுவந்தால் பிணி எய்தாதென்பதும் முன்னோர் துணிவேயாகும்.

"அற்றதறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்கத் துவரப்பசித்து" குறள்.

இனிபிணியிலா உணவுகொண்டு வீடுபெற வாழ்ந்தால் வாகடத்தாருக்குப் பொருள்வாரிக் கொட்டவேண்டாம். பெற்றபொருள் ஓங்கிப்பெரிதும் வளரும். அற்றம் மட்டில் அமைதியான ஆனந்த வாழ்வுண்டாம். ஆதலின் சிக்கனமாகச் செலவுசெ[redacted]வதே சிறப்புடையதாகும்.

---

## நமது சமய ஒழுக்கம்.

திரு. சங்கரநாராயண தேசிகர் அ[redacted].

நீர் சூழ்ந்த இந்நில உலகத்தின்கண் பல்வேறு சமயங்களும் படர்ந்து வருகின்றனவாயினும் அவையனைத்துந் தோன்றுமுன்னரே 'தொன்மையும் நடுவுமீறுந்தோன்றிலா நோக்குஞ் சைவம்' என ஆன்றோர் மொழியிலமையுந் தன்மையில் அநாதியே காலவரையற்று நின்று மிளிர்வது நமது "சைவ சமயம்" ஒன்றேயன்றிப் பிறிதில்லை யென்பது நம்முதிய ஆராய்ச்சியாளர் துணிபு. அந்த சைவ சமயம் 'பாண்டிநாடே பழம்பதியாக' என்று மணிமொழி வள்ளல் வழுத்துமாறு பாண்டிநாட்டை உன்னத ஆசனமாகக்கொண்டு தமிழ் வழங்கும் நாடுமட்டுமன்றி பிறசொல் வழங்கும் மற்றைய நாடுகளும் தனது ஆக்ஞாசக்கரத் துக்குட்பட ஆண்டு வந்த

து வருகின்றது. ஆயின் அதுபழக்க வழக்கங்களில்மாத்திரம் காலதேச வர்த்தமானத்துக் கேற்ப சிறிது பேதமுறினும் முக்கியாம்சங்கள் முற்றிலும் ஒத்தே அமைகின்றது.

அஃதெவ்வாறாக நம்தமிழ் ஞாலத்து முன்னைய மாந்தர்கள் கையாண்டுவந்த சமய ஒழுக்கங்களை நாமனைவரும் கைக்கொண்டொழுகி நின்று வருகின்றோமா? என்று ஆராய்ந்தக்கால் இல்லை இல்லை என்றுதான் இயம்பமுடியும். ஒருசிலர் கடியவரை யொழுகிவரினும் அதுபோதா. ஒரு சமுகத்திற்கு முன்னேற்றம் வேண்டுமாயின் அது ஒழுக்கவகையானேயாகும். அவ்வொழுக்கம் சமயச் சார்பினமைந்து கிடக்கின்றன. சமயம் இறைவன் மாட்டு அன்பு செலுத்தி வழிபடுமுறைதவாமையால் வதிகின்றன. அம்முறையே அவ்வச்சமயமுதனூற்களிலமைந்து விளங்குந் தன்மையது இதனை எச்சமயத்தோர்களும் ஒப்புக்கொள்ளாதிருக்கமுடியாது. நமதுபத்திராதிபர் அவர்கள் கூறியுள்ளபடி இதுகாலை நமது சமுகத்திற்கும் சமயத்திற்கும் அலர்தூற்றும் அறிஞர்குழாம் ஒருபக்கம்அலரிவழியவும் அன்னிய சமயிகள் ஒருபக்கம் நகையாடி எழனஞ்செய்யவும் எவ்வளவு கவனக்குறைவிலிருந்தோம் இருக்கின்றோமென்று நாமனைவரும் கேட்பின் நமது உள்ளமே சாக்ஷிய முறைக்கும். என்னே! அனியாயம்.

நம்முன்னோர்கள் நாமனைவர்களும் சமயஒழுங்கை தவறவிட்டு அலர்மாரித்தூற்றும் மாற்றார்களிடம் வசைமொழி கேட்க வேண்டுமென்று ஆசீர்வதித்துப் போயினர்போலும். உண்மை ஞானத்துயர்ந்தோங்கிய நம்தாயுமானவர் தமது திருவாசகத்திலே "சைவசமயமே சமயம் சமயாதீதப்பழம் பொருளைக்கைவந்திடவே மன்றுள் வெளிகாட்டுமிந்தக் கருத்தைவிட்டுப் பொய்வந்துழலும் சமயநெறி புகுதவேண்டாமுத்தி சேரும் தெய்வ சபையைக்காண்பதற்குச் சேரவாரும் செகத்தீரே" என்று எனையோரையும் அறைகூவியழைக்கும்படி அவ்வளவு உன்னத நிலைமையிலிருந்துவந்த நமது "சைவசமயம்" ஏனைய சமயங்களையும் தன்னுள் அடக்கி அவற்றிற்குத் தாயகமாயும் நாயகமாயும் நின்று பெறுதற்கரிய சமயசந்தானாசாரியர்களையும், திருத்தொண்டர் குழாங்களையும், வி

வேகானந்தர் முதலிய சமீபகாலத்துப் பெரியார்களையும் பெற்று உலகமெங்கனும் திக்கு விசயஞ் செய்து நின்றதுபோக, ஈண்டு தகையற்றவர் வாயினின்று அவர்மொழி கேட்கவும் வாய்த்து விட்டது நமது கவனக்குறைவினாலன்றோ. அந்தோ! பரிதாபம் பரிதாபம்! ஏ! சைவவேளாள சம்பன்னர்களே!

நீவிர் இன்னும் கவனக்குறைவால் அசட்டை செய்து காலம் போக்கவா போகிறீர்கள்? சமுக முன்னேற்றம் சமயமுன்னேற்றத்திலன்றோ சார்ந்து கிடக்கின்றது. ஒன்றைவிட்டு ஒன்றைக்கவர்ந்து கொள்வான்முயல்வது முடியாதகாரியம். சமயத்தினாலேயே சமுகம் முன்னேற்றம் அடையவேண்டும். சமயஒழுக்கம் எத்துணை முன்னேற்றத்துக்கு வருகின்றதோ அத்துணையளைத்தே சமுகமுன்னேற்றமும் தலை சிறந்து விளங்கும். ஏனெனில் நமது சமயஒழுக்கத்தின் அமைப்பிலேதான் சமுகமுன்னேற்றத்திற்கு உரியனவும் அமைந்து கிடக்கின்றன. இதைவிட்டு சமுகமுன்னேற்றம் வேண்டும் வேண்டுமென்றால் அது எங்கிருந்து எவ்வகைத்தால்வரும், போர்ட் மெயிலிலிருந்துவருமா? அல்லது கப்பல் ஆகாயவிமானம் முதலியவைகளிலிருந்து வருமா? சமுகமுன்னேற்றத்திற்கு அடிப்படையான அஸ்திவாரம் சமய ஒழுக்க முன்னேற்றத்தில் அமைந்துள்ளதென்பதை நமது சைவவேளாள மக்களனைவரும் நன்குணர்ந்து அதை நாடமுயற்சித்தல் மிக அத்தியாவசியமானது. அதனாலேதான் சமுக முன்னேற்றம் தலைபெற விளங்கும். நமது சமயஒழுக்கமுன்னேற்றமடைய வேண்டுமாயின் "சைவாகமாதி சித்தாந்த சாத்திரங்க"ளை ஒருங்கேயுணர்ந்து அதன்படியொழுகுதல் வேண்டும். அவ்வாறு ஒழுகமுயலுங்கால் அதற்குரிய தன்மையனைத்தும் அமைந்து கொள்ளவேண்டும் அத்தகுதன்மை தருவது சிவதீக்கையே என்றும் அஃதில்லையெனிற் சிவசத்துருவாகுவனென்னும் கருத்தை ஆகமத்தில் "தீக்ஷாஹீநே சிவத்ரோஹி சிவசாஸ்த்ரம் சிவாலயம், சிவமந்த்ரேண ருத்ராக்ஷம் கர்த்தவ்யம் நரகம் வ்ருஜேத்" (இதன் பொருள்) சிவதீக்கை பெற்றுக்கொள்ளாதவன் சிவனுக்குச் சத்துருவானதினால் அவன் சைவசாஸ்திரத்தையும், சிவாலயத்தையும், சிவமந்திரத்தையும் உத்திராக்கத்தையும்

தொடக்கூடாது. தொடினரகத்திற்சேருவானென்றும் இன்னும் அக்கருத்தை விளக்கியே

"புங்கமாஞ்சிவ புண்ணியத்தேசிகர்
தங்கள் வாக்குபதேசமதன்றியே
இங்கியற்றினிரும் பயனில்லையா
மங்குலென்னுபரன் புகலாகமம்"

என்னும் முன்னோர் திருவாய்மைகள் நமக்குக் கிடைக்கின்றன. இனி அத்தீக்கையாது? அதனாலென்னபயன்? அதனை எவ்வாறு பெறல் வேண்டும் என்பதை தெரியவேண்டியது மிக அத்தியாவசியமேயாகும். (தொடரும்)

---

## நம்முன்னிற்கும் முதல்வேலை

---

திரு—C. P. ஆனந்தா அவர்கள்

நேயர்களே, "மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்லுவதிலோர் மகிமையில்லை" என்பது யாரும் ஒப்பத்தகுந்த ஒரு உண்மையாகும். நமது பண்டைக்காலஉயர்வுகளைப்பற்றி விரிப்பது மட்டில் யாதொரு பயனுமில்லை. மற்று, இன்றைப் பொழுதில் நம் அயர்வு நம்மால் உணரப் பெறல் வேண்டும். அயர்வின் உணர்ச்சி உயர்வின் உச்சிவீற்றிருக்கைக்கு நிச்சயமாக வழி நடத்தக்கூடியதாகும். அயர்வைப்பற்றிய உணர்ச்சி ஒரே பொழுதில் அதன் நீக்கத்திற்கும் உயர்வு நோக்கிய ஆக்கத்திற்கும் அடிகோலும். ஆகவே, நமது பழைய உயர்வுகளை விளக்கும் புராண ஆராய்ச்சியில் பொழுது போக்காமல், பொதுவில், நமவகுப்பினர் நாட்டின் நலம் பேணுமளவையின் எவ்வளவிற்கு பொறுப்புடையவர்கள் என்பது பற்றி மாத்திரம் சுருங்கக் கூறிவிடின் நம்முன்னிற்கும்வேலை எளிதில் நமக்குத் தெரிந்துவிடும்.

இந்நிலையில், வர்த்தகமும் விவசாயமும் நம்மவர்க்கு உரித்தானவைகளாகக் கருதப்படுகின்றன. புராண காலங்களில் அரசியலி

னும் கலந்து செம்மை வேந்தர்க்கு அமைச்சராய்த் துலங்கினரெனத் தெரிகின்றது. அது கழிந்த சாசன காலங்களில் அறம்பேணும் பிள்ளைகளாக அரண் செய்து வந்தனரெனப் புலனாகின்றது. சாசன காலத்திற்குப் பின்னும் சரித்திர கால ஆரம்பத்தும் லௌகிகத்துப் போலவே அலௌகிகத்தும் உள்ள எல்லாத் துறைகளிலும் சீரிய சிறப்புடன் திகழ்ந்திருக்கின்றனர். வேதகாலந் தொட்டே, இவர்களுக்கு அன்னியரின் பகைத்தொடர்பு இருந்து வந்ததெனினும் இவர்களின் பூர்வாங்கமான அடிதளம் அசைவற்றிருக்கும்வரை அன்னியரின் பகைத்தாக்குகள் பல மற்றவைகளாக விருந்தன. கடைசியில் அன்னியர் பகைத் தொடர்பு வெற்றி பெற்றதாகவே, லௌகிகத்திலும் அலௌகிகத்திலும் அவர்களை நாம் எதிர்பார்த்திருக்கவேண்டிய அவ்வளவு கேவல நிலைக்கு வந்து விட்டோம்.

அன்னியர் ஆதிக்கமே நம்முள் இருக்கும் ஒற்றுமையைக் குறைத்தது; அதன் ஆணிவேரையுங்கூடப் பிடுங்கி யிருக்கிறது எனக்கூறலாம். பிரித்தாளும் வல்லமையின் சூழ்ச்சியை நாம் கண்டு கொள்ளக்கூடாமல், நளினப்போர்வை வயினால் மறைத்து விட்டது. நம்நன்மையைப்பாதுகாப்பவர்கள் அவர்கள்தான் என்று நம்மைத் திடமாக நம்பும்படி செய்தது. அதனால் நாம் எளிதில் உன்னதத்தின் முடியினின்றும் பாதல அந்தகாரத்திற்கு தள்ளப்பட்டவர்களாகத் தயங்கும் நிலைக்கு ஆளானோம். தயங்கும்நிலையை அதாவது நமது அயர்ச்சியை உணரக்கூடமாட்டாமல் அவ்வளவு அந்தகாரத்துள் சிறைப்பட்டு விட்டோம். ஆனால் வேளாண்மரபினர் எக்காலத்தும் கோழைப்படாமேறிச் செல்வர் ஆகலின், அவ்வியல் மிகவும் பிற்பொழுதிலாவது தன் கடமையைச் செய்யத் தாழ்ந்ததில்லை. இதனால்தான் உயர்வு நோக்கிய எழுச்சி கருதி நம் மரபு இன்று முனைந்துளது. அஃது மகிழ்ச்சிக்குரியதே.

உயர்வு நோக்கிய எழுச்சிக்கண் அதன் வேகத்து ஆக்கவேலைகள் சிறக்கவேண்டும். ஆக்கவேலை வருங்கால இளைஞர் குழாத்து நாம் செய்யவேண்டுவதுதான் மிகவும் பயனுடைத்து. இன்றைக்கு வீதிகளில் சிறு தேருருட்டி விளையாடும் சிறுவர்தாம் நாளை நம்

நாட்டின் நலம் காக்கும் துறைகள் ஒவ்வொன்றினும்நின்று அரண் செய்யவேண்டியவர்களாவர். ஆகவே, நம் மரபின் ஆக்கத்திற்கான முதல்வேலை சிறார் குழாத்துத்தானிருப்பதாகும். அக்குழுவினரின் கல்விப்பயிற்சிக்கண் நம்முழுக்கவனமும் செலுத்தப் பெறலே நம் முன்னிற்கும் முதல் வேலையாகும்.

அவர்கட்குத் தற்கால அரசாங்கப் பள்ளிப் படிப்பு நம் மரபின் ஆக்கத்திற்குச் சிறிதளவும் உதவி செய்ய முடியாதிருப்பது யாரும் அறிந்ததே. வர்த்தகம், விவசாயம், தொழிற்கல்வி பயிற்சி சாதனங்கள் ஏற்படுத்தவேண்டும். அப்பயிற்சியின் பயனை இயற்கை இளங்குழுவினர் வருங்கால சமூகஅமைப்பில் ஒவ்வொரு துறைகளிலும் நின்று நன்கு அரண்செய்யத் தகுந்தவர்களாக இலங்கவேண்டும்.

நேயர்களே, நமது ஜில்லாவில் உள்ள "வேளாளர் கல்வியபிவிருத்திச் சங்கம்" ஏராளமான தொகைகளை உயர்தரப் படிப்பின் பொருட்டுச் செல்லும் மாணவர்கட்கு கடனாகவும் இனாமாகவும் உதவுதலோடு பண்டைய வேளாளர் கல்விமுறைப் பயிற்சிக்கேற்ற கல்வி நிலையங்கள் ஆங்காங்குநிறுவி, நம்மரபுச்சிறார்களைத் தக்கபடி தயாரித்து வருவதில் விநியோகிக்கப் பெறின் மரபின் உயர்விற்கு உறுதி அளித்ததாகும். வேளாண் சிறுவர் இம்முறையே பயிற்சி பெற்று, வர்த்தக-விவசாய-தொழிற்றுறைகளில் அன்னார் தனி சிறக்கச்செய்தல் நங்கடனாகும்.

அரசாங்கப் பட்டயங்கள், பாஷாவளம் நிறைந்த பண்டிதத்திறம், புலமை நலம் ஒரு ஜாதியை, ஒரு நாட்டை உயரச்செய்யச் சக்தியற்றன. ஒரு நாடு உயர, ஒரு ஜாதி செழிப்புற உலகியல் ஞானம் நிரம்பிய யோஜனா சக்தியைப் பெருக்கும் வன்மையை உண்டு பண்ணக்கூடிய கல்விப் பயிற்சிதான் விசேஷமாக உதவி செய்யமுடியும். இப்பயிற்சியை நம்சிறார்கட்கு ஊட்டத்தகுந்த முறைகளில் நிலையங்கள் ஆங்காங்கு நிறுவுவதன்கண் நம் கவனஞ் செலுத்தப் பெறல்வேண்டும். இதுவே, நம்முன்னிற்கும் முதல் வேலையாகும்.

---

# இந்தியாவின் செல்வம் விருத்தியடைவதெப்படி?

[1915-ம் வருஷ இறுதியில் நடைபெற்ற கைத்தொழில் மகாநாட்டில் ஸ்ரீமான் ஐ. பி. பாரேக் என்பவர் வாசித்த ஒரு கட்டுரையின் சாரம் வருமாறு:—

(முன் தொடர்ச்சி.)

விவசாயம், சுரங்கத்தொழில் முதலியவைகள் தவிர, வேறு பல தொழில்களும் இருக்கின்றன. இவற்றில் சில மறைந்துவிட்டன; இன்னும் சில மறைந்துகொண்டிருக்கின்றன. மஸ்லின் துணி நெய்தல், காலிகோ துணி செய்தல், டாக்கா பட்டுத்தொழில் முதலியவைகளை நாம் புறக்கணித்துக்கொண்டு வருகிறோம். இப்பொது கூட, இத்தொழில்கள் கவனிப்பாரற்ற நிலையில் இருக்கும் இக்காலத்திலகூட ஒருகோடி ஜனங்கள் இத்தொழில்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். பாத்திரவேலை, நகாசுவேலை, நூல்நூற்றல், கைதொழில் முதலிய வேலைகள் இன்னும் பலர் கைக்கொண்டிருக்கின்றனர்.

* * * *

மேற்கூறப்பட்டவைகளைக் கொண்டு இந்தியாவின் உண்டாக்கும சக்தி இவ்வளவென்று தெரிந்துகொள்ளலாம். இவைகளை எபபடி அபிவிருத்தி செய்வது என்பதைப்பற்றியே நாம் கவனிக்கவேண்டும். அதாவது நமது வருஷவரும்படியை எப்படி அதிகரித்துக்கொள்ளலாம் என்பதை ஆராயவேண்டும இந்தியரின் சராசரி வரும்படி இருபத்தேழு ரூபாவென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதை எப்படி அதிகப்படுத்துவது என்பதே கவனிக்கவேண்டிய விஷயமாகும். ஒரு நாட்டவரின் சராசரி வரும்படியைக்கொண்டே அத்தேசத்தின் செல்வநிலை இப்பொழுது கணக்கிடப்படுகிறது. ஆகலின் இதனைப் பெருக்க என்னென்ன வழிகள் இருக்கின்றன என்பதைப்பற்றி ஆராய்வோம்.

* * * *

முதலாவது கைத்தொழில் முன்னேற்றத்திற்குத் திறமையே வேண்டும். தொழிலாளரின் திறமையே அத்தொழிலைச் சிறப்பிப்பதாகும். இந்தத் தொழில் திறமை இந்தியர்களிடத்தில் குறைவாக இருப்பதினாலேயே, நாம் பிறநாட்டாருடைய கைத்தொழில்களுடன் போட்டி போட முடியவில்லை. இதற்காகத் தொழிலாளரைக் குறை கூறுவது நியாயமல்ல. கல்விப் பெருக்கினால் தொழிலாளரின் திறமையும் அதிகமாகிறது. ஆரம்பக் கல்வியேனும் தொழிலாவருக்குப் போதிக்கப்படவேண்டும். சித்திரமெழுதல், ஒன்றைப் பார்த்து அதன்படி செய்யப் பழகுதல், தச்சவேலை முதலியவைகளில் அவர்களுக்கு ஆரம்பப் போதனையேனும் கொடுக்கப்படவேண்டும். இதனால் தன்னுடைய ஆயுதங்களை எப்படி உபயோகிப்பது முதலிய தனது பிற்கால வாழ்க்கையில் ஏற்படக்கூடிய கஷ்டங்களைச் சுலபமாகக்கடந்துவிட அவன் யோக்கியதை பெறுகிறான். தொழிலாளருக்குக் கல்வி அறிவு புகட்டினால் தொழில் திறமை உண்டாகும் என்பது ஒருபுற மிருக்கட்டும்.

*    *    *    *

இவர்கள் தவிர, தொழில் அபிவிருத்திக்குவேறு உயர்ந்த அறிஞர்களும் வேண்டியிருக்கிறது. இஞ்சினீர்கள், சாஸ்திரீய அறிஞர்கள், வியாபார நிபுணர்கள் முதலியவர்களும் வேண்டியிருக்கிறது. இஞ்சினீர்கள் புதிய இயந்திரங்களைக் கண்டு பிடிக்கிறார்கள். அல்லது பழைய இயந்திரங்கள் இன்னும் அதிகமாக உபயோகப்படும்படி செய்கிறார்கள். சாஸ்திரீய அறிஞர்கள் தொழிலுக்குவேண்டிய சாயம் முதலிய உதவிச் சாமான்களைச்செய்து கொடுக்கிறார்கள் வியாபாரிகள், உண்டாக்கப்பட்ட சரக்குகள் வெளியில் விற்பனையாக ஏற்பாடு செய்கிறார்கள். ஆனால் இதுகாலை கடைசியில் கூறப்பட்ட வியாபாரிகளே, ஒரு தொழிலின் அபிவிருத்திக்கு முக்கியமானவர்களாகக் கருதப்படுகிறார்கள். ஆதலின் இந்தியஇளைஞர்களுக்கு வியாபாரக் கல்வியும் கொடுக்கப்படவேண்டும். வியாபாரக் கல்லூரிகள் சில, இந்தியாவில இருக்கின்றனவானாலும் இந்தியாவின் விஸ்தீரணத்தையும ஜனத்தொகையையும் உத்தேசிக்குமளவில் இவை போதாவென்றேசொல்லவேண்டும். இங்கிலாந்திலும ஜர்மனி முதலிய இடங்களிலும இத்தகைய வியாபாரக் கல்லூரிகள் ஏற்பட்

டிருக்கின்றன. உதாரணமாக வேல்ஸ் உள்பட்ட இங்கிலாந்தில் இருபத்தேழுபள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இவைகளில் 19529 மாணவர்கள் படிக்கிறார்கள். இவைதவிர 114 பள்ளிக்கூடங்கள் வியாபாரக் கல்வியைப் போதிக்கின்றன. இங்ஙனமே ஜர்மனி, ஜப்பான் முதலிய இடங்களிலும் இருக்கின்றன.

* * * *

நமது தேசத்தின் செல்வத்தை அபிவிருத்தி செய்வதற்கு மூன்றாவது வழி நீர்ப்பாசன வசதியாகும். வாய்க்கால், கிணறு, குளம் முதலியவைகள் மூலமாக நீர்ப்பாசன வசதிகளைச் செய்து கொள்வதுண்டு. பிரிட்டிஷ் ஆட்சியினால் பாசனவசதிகள் அதிகமாகி இருக்கின்றனவென்று கூறவேண்டும். நீர்ப்பாசனங்கள் அதிகப்படுத்துவதனால், அரசாங்கத்தாருடைய வரும்படியும் அதிகரிக்கும். மற்றும், இப்பாசனங்களால் பஞ்சம் அடிக்கடி ஏற்படுவதைக் குறைக்கக்கூடும்.

* * * *

நான்காவது வழி கூட்டுறவு முறையாகும். மேனாட்டாரின் செல்வம் அபிவிருத்தியானதற்கு இஃதொரு முக்கியமான காரணமாகும். கூட்டுறவு முறையைக் கையாண்ட டென்மார்க்கு தேசம் வெகு சீக்கிரத்தில், பணக்கார தேசமாக மாறிவிட்டது. இங்கிலாந்து, அமெரிக்கா ஐக்கியமாகாணம், ஜர்மனி, ஸ்விட்ஸர்லாந்து முதலிய தேசங்கள் இந்தக்கூட்டுறவு முறையைக்கைக்கொண்டு தங்களுடைய பொருட் செல்வத்தை அபிவிருத்தி செய்துகொண்டன. இங்ஙனமே இந்தியாவும் செய்துகொள்ளவேண்டும். 1904ம் வருஷத்திற்கு முன்னர், இதைப்பற்றி இந்தியாவில் பலருக்குத் தெரியாமலிருந்தது. லார்ட் கர்ஸனே இந்த இயக்கத்தை முதன் முதலில் உண்டாக்கினார். பிறகு இந்தியாவில் கூட்டுறவுச் சங்கங்கள் நாளா வட்டத்தில் அபிவிருத்தி யடைந்துகொண்டு வருகின்றன. இச்சங்கங்களின் மூலமாக, எத்தனையோபேர் கடன்காரர்களுடைய உபத்திரவத்தினின்று நீங்கியிருக்கிறார்கள். எத்தனையோபேர் தங்களுடைய விவசாயக் கருவிகளை இச்சங்கங்களின் மூலமாக வாங்கி நன்மை பெற்றிருக்கிறார்கள்.

இந்தியாவின் செல்வத்தைப் பெருக்குவதற்கு மற்றொரு வழி நமது நாட்டுக் கைத்தொழில்களைப் புதுக்குவதேயாகும். தற்காலத்தில் இயந்திர சம்பந்தமான கைத்தொழில்கள் மிக அதிகமாகப்போனாலும், இந்தக் கைத்தொழில்களினால் அதிக நலம் விளைகிறது என்பதில் ஐயமில்லை. இயந்திரத் தொழில்களில் சில தீமைகள் இருக்கின்றன. அத்தீமைகள் தமது நாட்டுக்கைத் தொழில்களில் இல்லை. தகுந்தவசதிகளும்ஆதரவும் கொடுக்கப்.பெறாமையால் நமது நாட்டுக் கைத்தொழில்கள் சீரழிந்து போயின. ஆதலின் அவைகளுக்குப் போதுமான ஆதரவு கொடுப்பதுடன், புதிய முறைகளை இக்கைத்தொழில்கள் சம்பந்தமாக நாம் அநுசரிக்க வேண்டும். மற்றும், நாட்டுக்கைத்தொழிலைப் புதுப்பிப்பதற்கு வேண்டிய சில கைத்தொழிற் பள்ளிக்கூடங்களையும், ஆங்காங்கு ஏற்படுத்தவேண்டும். தங்கள் கையினால் செய்யப்பட்ட சாமான்கள் எங்கெங்கு விற்பனையாகும் என்பதைப்பற்றித் தொழிலாளருக்கு அறிவிக்க ஒரு சங்கமும் காணப்படல் வேண்டும்.

* * * *

ஆறாவது நமது நாட்டுக் கைத்தொழில்களுக்குக் காப்புக்கொடுக்க வேண்டும். ஆரம்பநிலையிலுள்ள கைத்தொழில்களுக்குக் காப்புக்கொடுக்க வேண்டுமென்பதை எல்லாப் பொருளாதார நிபுணர்களும் அறிந்திருக்கிறார்கள். ஆதலின் இந்தியர்கள், தங்கள் வியாபாரத்தைப் பொருத்தமட்டில் காப்பு முறை அநுசரிக்கப்படுவதற்குப் பார்த்துக்கொள்ளவேண்டும்.

---

# வேளாளர் நிலைமை.

---

திரு. இ. வெண்ணிமாலைபிள்ளை அவர்கள், B. A., B. L.

முன் தொடர்ச்சி.

பண்டைக்காலத்திய வேளாளர் வள்ளல்களாயிருந்திருக்கிறார்களெனின் அவர்களிடம் செல்வச் சேகரிப்புக்காய வழக்கமும், கற்றல் கேட்டலாலுண்டாகும் பரந்த பொது அறிவும் (General

Culture) செறிந்திருந்தது என்பதும் இவை அவர்களில் ஆண் பெண் ஆகிய இருபாலார்களிடத்தும் பொருந்திக் காணப்பட்டது என்பதும் சொல்லாமலே தெரியக்கிடக்கும். என்னை? ஆக்கமும் அதற்காய ஊக்கமும், அறிவுமன்றோ வண்மைக்கு அடிப்படைப் பொருள்கள். இவைகளில் ஒன்றிருந்து ஒன்றில்லாவிடின் வள்ளற்றன்மை பிறக்காது. அவ்வடிப்படைப் பொருள்களும் ஒரு தலையாய் ஆண்மக்களிடம் மட்டுமமைந்திருந்தால் பயனில்லை. இல்வாழ்வானுக்கு எத்துணை ஈகைக் குணமிருப்பினும் அவனுக்கமைந்த இல்லாளுமில்லாளேயாமாயின் அவன் எவ்வாறு ஈகையை ஈட்ட முடியும். புலி போன்ற இல்லாளமைந்தான் ஔவைக்கு அமுதளிக்க ஒப்பி இருந்து முகந்திருத்தி ஈரோடுபேன்வாங்கி விருந்து வந்ததென்று விளம்பினனே? அவன் அடைந்த பேறுதான் என்னே! பழமுறத்தடியன்றோ! உலகம் போற்றும் கிரீக்தேசத்தத்துவ சாஸ்திரி சாக்ரட்டிஸ் எவ்வளவு கலைவல்லுநராயும் அறவாளியாயுமிருந்தார். எனினும் அவர்க்கு வாய்த்த கூற்றமனைய மனையாளால் அவர் பட்டபாடு சொல்லத்தான் படுமோ? ஓர் அமயம் ஊடலாய் ஞானி தெருத்திண்ணையில் உட்கார்ந்தார். இல்லிருந்து வரும் இல்லாள் ஏச்சுநின்றபாடில்லை. சரமாரியாய் வந்துகொண்டிருந்தது. இச்சமயம்நண்பரொருவர்சாஸ்திரியாரைப்பார்க்கவந்தார். தத்துவசாஸ்திரியின்பக்கலில்உட்கார்ந்தார். இருவரும்பேசிக்கொண்டிருக்குமிடையில் தொப்பென்று கழுநீர்ப்பானை சாக்ரட்டிஸ் கழுத்தில்விழுந்தது. பார்த்தார்நண்பர்; பிரமித்தார். ஞானியாரோ குறுநகையுடன் 'அன்ப இதுகாறும் இடி-இடித்தது. இப்பொழுதுமழை பெய்கின்றது இதற்கென்ன பிரமை' என்றனர். இன்னோரன்ன பெண் பேய்களினால் ஆண் மக்கள் பெற்றிருக்கும் பேறுகளைச் சொல்லில் மிகும். எனவே பரந்த நோக்கமும் விரிந்த அறிவும் ஆண் மகனுக்கு மட்டுமிருப்பின் போதாது. குறுகிய நோக்கமும் மூடப்புத்தியுமுள்ள இல்லாளுடன் வாழநேரின் ஆண்மகன் கலைகளெல்லாங்கற்றுணர்ந்து என்பும் பிறர்க்குரியாய தகைமைத்தனாயிருப்பினும் அவனால் எந்தக்காரியத்தைத்தான் செய்ய இயலும்? ஆகவே நம்முன்னோர்களின் சிறப்பெய்த வேண்டுமெனின் நாம் முதலில் கவனிக்கவேண்டியது நம் பெண்களின் ஏற்றம். அன்னதுக்க

டிப்படைத்தாய கல்வியை நாம் அவர்களுக்குக் கற்பிப்பதில் எச்சிரமமும் எடுத்துக் கொள்ளத்தயாராயிருத்தல் வேண்டும். அடுப்பூதிப் பெண்ணுக்கேதற்கு படிப்பு என்பனபோன்ற நம்மவர்களில் சிலர் கொண்டிருக்கும் சில தப்பான எண்ணங்களை அறவே களைந்து நாமெல்லோரும் ஒரே மனதாய் நங்குலப் பெண்களுக்குக்கல்வியூட்டலில் இனியாவது கவனத்தைச்செலுத்தவேண்டும். கண்ணுள்ளார் கற்றோரே கல்லார்க்குக்கண்களேது? அன்னார்க்கு முகத்திரண்டு புண்களேயுள. ஆண் மகனுக்குக் கண்வேண்டுமென்று நாம் என்னபாடு படுகிறோம்? காணியை விற்றோ கடன் பட்டோ நம்மகனைப் படிப்பிப்பதில் நாம் எவ்வளவு ஊக்கம் எடுத்துக் கொள்கிறோம்? மக்களில் புத்திரனை உயர்த்தியும் புத்திரியைத் தாழ்த்தியுங்கூறும் இலக்கணம் நம்மதன்றே! தமிழ்முனி திருவள்ளுவரும் மக்கட் பேறு என்று அத்தியாயம் வகுத்தார். அன்னார் புத்திரப்பேறு என்று அத்தியாயம் வைக்கவில்லையே. அப்படிப்பாகுபாடில்லாத கொள்கையுடைய நாம் இக்கல்வி புகட்டுவதில் மட்டும் ஏனோ வித்தியாசங்காட்டவேண்டும்?

மேலும், இல்லறச்சகடம் இனிதோடவேண்டுமானால் இழுப்பாரிருவரும் ஒத்தமனத்தராயிருத்தல் அவசியம். இல்லையேல்வலவன் கிழக்கும் இடவன் மேற்குமாய்ப் போகும் வண்டியின் பாடன்றோ இல்வாழ்வார் அனுபவிப்பர். இம்மனவொப்பு அறிவொப்பிலிருந்து அமைவது எனின், மணவாளன் அறிவை விருத்திபண்ணுவதில்மட்டும் மனத்தைச்செலுத்தி மணவாட்டியின் மடமையை நீக்குவதில் சிறிதேனும் கருத்தைச் செலுத்தாது நாமிருந்து வருவோமாயின் மணாளர்களுக்குள் அறிவொப்பு எங்கிருந்து அமையும்? அறிவொப்பில்லையேல் மனவொப்பில்லை, மனவொப்பில்லாது நடாத்தும் இல்வாழ்வால் மணையாளர்க்கும் இன்பமேகிடையாது., அன்னார் என்றும் துன்பமே அனுபவிப்பர் என்னே நம்செய்கை! உலகில் உயிர்களெல்லாம் ஒம்புவது இன்பம். இல்வாழ்வும இன்பம் தருவான் பொருட்டு மக்கள் ஏற்படுத்திக்கொண்ட ஒரு சாதகம். அவ்வின்பம் சிற்றின்பமோ, பேரின்பமோ எவ்வின்பமாயினுமாகுக். இத்தகைய இன்பத்துக்காய இல்வாழ்வை நாம் துன்பத்துக்குறைவிட

மாயன் ஞேபன் னுகிஞேம் நடைத்தையால். இது முறையோ? இது தருமந்தானே? என் மனவொப்பில்லாத மக்களை வாழ்க்கையில் புகுத்துவதால் அன்ஞர் மனையில்]! அடியும் பிடியும் அழுகையும் பிணக்கும் நோயும் நொம்பலமும் குடி கொள்ள நாம் வகை தேடுகிறேமே யொழிய வேறு அவர்களுக்கு இன்பம் விளைவிக்கவோர் வழி செய்கிறோமா? அறவாளி ஆடவன் அறஞ்செய விரும்புகிறான். அவன் மனையாளோ தன்னலமல்லது பின்னல மில்லை யெனக் கொள்ளுங் குணத்தாள். அவன் விரும்பிச் செய்யும் அறச்செயல்களுக் கெல்லாம் முட்டுதல்களேபோட்டு வருகிறாள். அவளை நயமாயும் பயங்காட்டியும் தன்செயல்களுக்கு கிடஞ்சல் செய்யக்கூடாது என்று சொல்லிப்பார்க்கிறான், அவள் கேட்கிறபாடில்லை. பொறுக்கமுடியாது அவளை அடிக்கிறான். அவளும் அழுகிறாள் ஊரார்கூடுகிறார்கள் அவர்கள் வெளிக்கு பிணக்கைத்தீர்க்க வருவார்போலிருப்பினும் உள்ளார் நகையே செய்கிறார்கள். அவனும் என்னே நம்வாழ்க்கை; அவளோ இச்சண்டாளனுக்கா நான் பெண்டாக வேண்டும்என அயலாரிடம் பன்னிப் பன்னி அழுகிறாள் அறிவொவ்வாக் கிழவர்கள் இல்வாழ்வில் அடையும் இன்பம் இதுவேஇனி, அடி, பிடி முதலியவைகளால் விளையும் மானக்கேட்டுக்கு ஆண்மகன் அஞ்சின வனுயிருப்பின் அதுமுதல் மனையாளை வெறுக்கத்தொடங்குகிறான். இன்பமெய்துவான் பொருட்டு மணந்தமகன் இல்வாழ்க்கையில் இன்பங்காணுது துன்பமே காணவே, பரவாழ்க்கையை நாடுகின்றான். அவனைக்குற்றஞ்சொல்வதில் என்னபயன்? மக்கள் திரைகடலோடியுந்திரவியந்தேடுவதெல்லாம் சிறப்பாய் இல்லற இன்பநுகர்ச்சிக்காகத்தானே. மேலும் Min is a Social. Piped மக்களியல்பு கூடிவாழ்வது அதிலும் ஒத்தபாலர் கூட்டுவாழ்வைவிட வேற்றுமைப்பாலர் கூட்டுவாழ்வுசிறந்தது. தன்தாரத்துடன் இவ்வின்பத்தை நுகரமுடியாதுபோகவே பரத்தைதன்பயடைந்வது அவ்வின்பத்தையடைய லாமெனஅவன் விலைமாதரை நாடுகிறான். இது யார் பிழை? மடவார்க்கு அணிகலனுய மடமையுடன் மக்களுக்குப் புன்கலனுய மடமையைக்கொண்ட மனையாளின் பிழையெனச் சொல்லின் அது பிழையுமாகுமோ? நம் முன்னே

ரில் பலரிடமிருக்கும் ஒழுக்கக்குறைகளுக்கெல்லாம் இதனையே முக்கிய காரணமாகக் கொள்ளலாமென்பது என் துணிபு.

இது மட்டோ மனமொவ்வாக்கிழத்தியரால் வருங்கேடு! நாயும் பூனையும் போல் நித்தலும் நங்கையும் நம்பியும் பிணங்கி வாழ்ந்து வருவார்களாயின் அன்னார்க்குப் பிறக்கும் பிள்ளைகளும் அவர்களுக்கு இவர் தந்தை ஏன் பெற்றான் கொல் எனுஞ்சொல்லை உதவுவார்கள்என்பதில் ஐயமென்? தாயைப்போற் பிள்ளையென்றால் கருத்தரிக்குங்காலத்தும் வளருங்காலத்தும் தாய்க்கிருக்கும்மனப்பாங்கை யொட்டியே அவட்குப்பிறக்கும் பிள்ளைகளிருப்பார்கள்என்பதே. இது நான் சொல்லுவதல்ல. மக்கள்பிறப்பு வளர்ப்புநூல்வல்லுநர்கள் ஆய்ந்து அறைவதே. அன்னதற்குச்சான்றுகள் சரித்திரவாராய்ச்சியிலும் பல கிடைக்கின்றன.

---

## வாலிபர் இயக்கமும்
## தூத்துக்குடி வேளாள வாலிபர் சங்கமும்.

---

### வேளாள வாலிப நண்பன் வரைவது.

தூத்துக்குடியில் நம் வேளாள வாலிப நண்பர்கள் ஒரு சங்கம்கூட்டியிருப்பதை வேளாளன்பத்திரிகைவாயிலாகஅறியஎல்லா வேளாள மக்களும் சந்தோஷமடைவார்கள் என்பதற்கு ஐயமில்லை. அதைக்கேட்க நான் மிக்க மகிழ்வெய்துகின்றேன். ஒரு சமூகமோ தேசமோ முன்னேற்றமடைய வேண்டுமானால் அந்த சமூகத்தின் அல்லது தேசத்தின் வாலிபர்களின் முயற்சியும் ஊக்கமும் இன்றியமையாததாகும். இச்சங்கம் வேளாள வாலிபர் அபிவிர்த்தி விஷயத்தில் மிக்கத்தீவிரமாக முயற்சி செய்யுமென்றும், பேரளவில் தோன்றி மற்றவர்களுக்கு நகைப்புக்கு இடந்தராமல், ஒவ்வொரு ஊரிலும் ஒரு வேளாள வாலிபர் சங்கம் தோன்ற, வழிகாட்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இச்சங்கத்தை ஆண்டவன் காப்பாராக. வேளாள வாலிபர் சங்கம் கவனிக்கக்கூடியசிலகுறிப்புகள்.

வேளாள வாலிப சங்கத்தார் வாரம் ஒரு முறை சங்கம் கூட்டி ஏதாவது விஷயத்தை எடுத்து பிரசங்கம், தர்க்கஞ் செதல் சபைக்கூச்சமின்றி பேச ஒவ்வொருவரும் பழகவேண்டும். இனிமேல் பொது ஜனஊழிய வாழ்க்கையில் உழைக்க முன்வருவோர் சபையில் பேச சக்தியில்லாவிட்டால் ஒருகாரியமும் சாதிப்பது கஷ்டமாகும். சங்கத்தின் விதிகளில் ஒன்று "விஷயத்தை ஒட்டி ஒவ்வொருவரும் ஏதாவது இரண்டு வார்த்தையாவது, பேசவேண்டும் அல்லது எழுதியாவது வாசிக்கவேண்டும்" என்பது இருக்கவேண்டும். கூடியவரை குறிப்பிட்ட நேரத்தில் பிரசங்கம் நடைபெறவேண்டும். 8 பேர் வந்தாலும், தங்களுக் குள்ளே ஒருவரை அக்கிராசனராக வைத்துக் கூட்டத்தை தளர்ச்சியின்றி நடத்தவேண்டும். மாதம் ஒருமுறைநம்பெரியோர்களை அக்கிராசனராகக் கொண்டும், வாலிபர் நண்பர்கள் விஷயங்கள் எடுத்துப் பேசலாம். சங்கத்தின் ஆதரவின்கீழ் பெரியோர்கள் பிரசங்கங்கள் நிகழ்சிபெறலாம். வாரம் ஒருமுறை கூட்டத்திற்கு முன்னதாக 1மணிநேரம "திருக்குறள் வாசிப்புக் கூட்டம்" (Tirkural Circte)போன்ற வாசிப்புமிகுந்த ஆசிரியரின் உதவியால் நடத்தப்படலாம். வாரமீட்டிங் ஞாயிற்றுக்கிழமைகளில்நடப்பதுஉசிதம். 3வாரம் சாதாரணக் கூட்டங்களும் ஒருவாரம் மாத மீட்டிங்காகவும் வைத்துக்கொள்ளலாம். நம்மவர்கள் ஒருசபைக்குப்போகிறதுஎன்கிறவழக்கத்தையே இனிமேல் தான் பழகிக்கொள்ள வேண்டியிருக்கிறது. இலவசமாகக்கிடைக்கக்கூடிய தேவாரக் கச்சேரிகளைச்சேர்த்துக்கொள்ளுதலும் மாதம் ஒருவர் கட்டளையாக படத்திற்கு பூசைசெய்து பிரசங்கம் முடிந்ததும் சுண்டல்முதலியன விநியோகம்செய்வதும் பிரயோஜனமாயிருக்கும். இலேசான கடுதாசியில் பிரசங்க விஷயம், நேரம், பிரசங்கியார் முதலிய அயிட்டங்களுக்கு இடம் விட்டு 1000 நோட்டீஸ் அச்சடித்து விட்டால் அப்போதைக்கப்போது அவைகளைப் பூர்த்திசெய்து வெளியிடலாம்.

சங்கம் சரிவர நடைபெறவேண்டுமானால் அத்தோடு ஒருதேகப்பயிற்சிக் கூட்டமும் வாசகசாலை புஸ்தகசாலை முதலியனஇருத்தல் அவசியம்.

தினசரி ஏதாவது தேகப்பயிற்சிசெய்யச்சங்கத்தில்இடமிருத்தல் அத்தியாவசியம். தண்டால், பஸ்கி முதலிய நம்தேச தேகப்பயிற்சியும் பேட்மிண்டன்போன்ற அதிகச்செலவில்லாத விளையாட்டுகளையும் முதலில் ஆரம்பிக்கலாம். விளையாடும் ஸ்தலங்கள் சங்க ஆபிசுக்குப் பக்கமாயிருத்தல்அவசியம். அறைக்குள்ளிருந்து விளையாடக்கூடிய (Indior Games)குற்றமற்ற விளையாட்டுகளையும் ஏற்படுத்தலாம். வார்த்தைகட்டுதல் (Word Builping,)சதுரங்கம் (Chees) ட்ராட்ஸ் (Draights.) பிங்பாங் (Ping Pong) முதலியவைகள் ஏற்படுத்தலாம். சீட்டுவிளையாட்டு குற்றமற்றதாகவும் எல்லோரும் பிரியப்படக்கூடியமாதிரி இருந்தாலும் அதிலேயே மூழ்கி வீண்நேரம் அதிகமாக கழிக்க ஏற்படுமாகையால் அதை நீக்குவது பெரும்பான்மையோர்க்குப் பிரியமில்லாதிருப்பினும், நீக்குவது உசிதம். குறிப்பிட்ட மணிகளுக்குமாத்திரம் விளையாட்டுகள் விளையாட இடமிருக்கவேண்டும். இவ்வாறு இருந்தால் வாலிபர்கள் சபைக்கு அதிகமாக வருவார்கள். பிரசங்க காலங்களிலும் கூட்டம் அதிகமாயிருக்கும். பிரசங்க காலங்களில், விளையாட்டுக் கருவிகளையும் பேப்பர்களையும் அறை உள்ளே வைத்துவிடவேண்டும். தேகப்பயிற்சி மிக இன்றியமையாதது.

வாசகசாலை:— ஒருதினசரி இங்கிலீஷ்பத்திரிகையும், ஒருதமிழ்ப்பத்திரிகையும்வருத்தல்அவசியம். மற்றப்படி இனமாகக்கிடைக்கக்கூடிய எல்லாமாதாந்தரத்தினசரிப்பத்திரிகைகளையும்ஏற்றுக்கொள்ளலாம். ஆரம்பகாலத்தில் உங்கள் வாலிபர் சங்க அக்கிராசனாதிபதிக்கு சொந்தமாய் வரக்கூடிய பத்திரிகையை, தான் வாசித்துவிட்டு மாலையில் வாசகசாலைக்கு அளித்தால் போதுமானது. இதேமாதிரி சில பெரிய கனவான்கள் பத்திரிகை உதவினால் மெம்பர்களுக்கு அதிகச்சந்தா இல்லாமல் வாசகசாலை நடைபெறும். சந்தா மிகக் குறைவாயிருந்தாலல்லாது சங்கம் அதிக வாலிபர்களின் ஊக்கத்தைப் பெறமுடியாது. "வேளாளன்" பத்திராதிபரவர்களும்பத்திரிகை விஷயமாய் உதவி செய்யலாம். வேளாளன் பத்திரிகைக்கு மாற்றாகக்கிடைக்கக்கூடிய பத்திரிகையை உதவலாம்.

புஸ்தகசாலை:— நண்பர்களிடம் இனமாகப் புஸ்தகங்கள் வாங்கி

100 புஸ்தகங்கள் கொண்ட புஸ்தகசாலையை முதலில் ஏற்படுத்தலாம்.

"வேளாளமக்கள் வேலைக்குத் தேவை" என்ற விளம்பரங்கள் சங்க நோட்டீஸ் போர்டுகளில் காணலாம்.

மெம்பர்களால் ஒரு இலவச இரவுபாடசாலை நடத்தப்படலாம் பொதுஜன ஊழியம் செய்யப் பழக்குவதும் கல்வியின் ஒரு முக்கியபகுதியாகும். தங்கள் படிப்பிற்கு இடைஞ்சல் வராதபடி ஏற்பாடு செய்து கொள்ளுதல் அவசியம். வேளாள உபாத்திமார்கள் இதில் மிக்க உதவி செய்யலாம். 24 நண்பர்கள் ஒன்று சேர்ந்து 3 மாதத்திற்கு ஒருதரம் 1 வாரம் இதரப்பாடசாலையில் 2 பேர் இலவசமாய் சொல்லிக் கொடுப்பதாய் ஒப்புக்கொண்டால் வருஷம் பூரவும் பாடசாலை நடைபெறும். பரீக்ஷை சமீபிக்கும் போது இரவு பாடசாலைக்கு ரஜாக் கொடுத்து விடலாம். முக்கியமாக விடுமுறை காலங்களில் பாடசாலை நன்றாக நடைபெறலாம்.

ஐக்கிய முறையை கைப்பற்றி மெம்பர்கள் "இண்டண்ட்" முறை(Indens System)யில் தங்களுக்குத்தேவையான, காகிதம், பேனா பென்சல், நோட்புஸ்தகம், விளையாட்டுக் கருவிகள் முதலியவைகளைத்தேவைக்கு தக்கவாறு மொத்தமாக வாங்கி பங்கிட்டுக் கொள்ளலாம். இந்தமுறை அப்பியாசத்திற்கு வந்தால் "கூட்டுறவுப்பண்டகசாலை வாலிபர்களுக்குத் தேவையான சாமான்கள் சம்மந்தப்பட்டமட்டில் ஏற்படுத்த இடமிருக்கும். இதுநல்லபழக்கம். வாலிபவயதிலேயேஐக்கியமுறைகள் பழக்கத்திற்கு வரவேண்டும்

இவ்வாறு,— வாரக்கூட்டம், விசேஷமாதாந்தக் கூட்டம், 'திருக்குறள் ஆராய்ச்சி' போன்ற ஆராய்ச்சிக்கூட்டம், தேவாரக்கச்சேரி போன்ற கச்சேரிகள், கதைகள், பூஜைசுண்டல் விநியோகம், முதலியவைகளிலும், தேகப்பயிற்சிசம்மந்தமாய் சுதேசவிளையாட்டுவசதிகள், பேட்மிண்டன், வாலிபால் போன்ற அதிகச்செலவில்லாத விளையாட்டுகள், அறை உள்ளேயிருந்து பொழுது போக்கும் விளையாட்டுகள் முதலிய வகையிலும், வாசகசாலை, புஸ்தகசாலை, இலவச இரவு பாடசாலை, ஐக்கிய முறையைக் கைப்பற்றி இண்டண்ட்

முறையில் சாமான்கள் வாங்குதல் முதலியவகையிலும், இதுபோன்ற மற்றும் வழிகளிலும் நம்வாலிப சங்கங்கள் வேலை செய்து வருமானால், நம்மக்களுக்கு, தேகவலிமை, அறிவுமுதிர்ச்சி பரோபகாரத்தன்மை, சிக்கனம், சகோதரத்தன்மை, ஒற்றுமை, பேசுந்திறமை, முதலிய பல நன்மைகள் ஏற்படும். இதன் மூலமாய் வேளாள சமூகம் நாளுக்கு நாள் முன்னேற்றமடையும். ராஜாங்க சம்மந்தமான விஷயங்களில் தலையிட்டுக் கொள்ளாமல், நம் குலப் பெரியோர்களின் ஆதரவையும், உதவியையும் பெற்று நம் வாலிப சங்கங்கள் ஊரூராய் ஏற்பட்டு வேலை செய்யுமானால் அதுமிக்க நன்மையைப் பயக்குமென்பதில் சந்தேகமில்லை. இவ்வாறு சங்கங்கள் நிலவி நடைபெற ஈசன் அருள் புரிவாராக.

(Y. M. C. A.) கிறிஸ்தவ இளைஞர் சங்கம் மாதிரி (Y. M. V. A. Young men's Veliale Association) இச் சங்கம் வேலை செய்தால் நம் குலப் பெரியோர்களையும் மெம்பர்களாகச் சேர்த்துக்கொள்ளலாம். வேணுமானால் அவர்களைக் கௌரவ மெம்பர்களாகச்சேர்த்துக்கொண்டு அவர்களிடம் சந்தாவாகப் பெறாமல் நன்கொடையாக உதவி பெறலாம். அல்லது அவர்களை ஒரு தனி தொகுதியினராக எடுத்துக் கொள்ளலாம். வாசகசாலை எல்லோருக்கும் பொதுவானதாயிருக்கும். [கூடிய சீக்கிரம் வேளாள வாலிபர் மகாநாடு கூட்ட ஏற்பாடு செய்தால் உசிதம்.]

## "வேளாளன்" வேண்டத்தக்கது.

(சிவநேசன்)

சுக்கில வருஷ வைகாசிமீ கூஉ-வெளியான "ஆனந்தபோதினி" வாரப்பத்திரிகையில் "வேளாளன்" எதற்கு? எனஒருகட்டுரை பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. எதற்கு என்னுஞ்சொல் கேள்வியிலும்வரும்; எதிர்மறையிலும்வரும், இந்தக் கட்டுரையின் தலைப்பெயரில் கேள்விக்குறியிட்டு, வாசகத்தில் "வேளாளன்" பத்திரிகை அனாவசிய மட்டுமன்று; கேடு விளைவிப்பதுமாகும் என்று எதிர்மறைப்

பொருளில் முடிந்திருக்கிறது. எனவே, கட்டுரை யாளரின் கருத்து எதிர்மறைப் பொருளைப் பற்றியதாகும். ஆகவே வேளாளன் வேண்டாமென்பது பெறப்படும். படவே, வேண்டுமா? வேண்டாமா? என ஆராய்ந்து தீர்மானித்தல் இன்றியமையாதது. ஆகையால் சிறிது ஆராய்வாம்.

உலகத்தில் சமய முன்னேற்றம், சாதிமுன்னேற்றம், மொழி முன்னேற்றம், தேசமுன்னேற்றம், எனமுன்னேற்றம் நால்வகைப்படும். வேறு பலமுன்னேற்றங்களும் உளவாயினும், அவையெல்லாம் அந்நான்கனுளடங்கும். இம்முன்னேற்றங்களுள், சமய முன்னேற்றமே அடியுரமானது. சமயமுன்னேற்றமின்றிச் செய்யப்படும் ஏனைய முன்னேற்றங்களெல்லாம், அடியுரமின்றிக் கட்டப்பட்ட மாளிகைபோல முற்றுப்பெறமாட்டா வென்பது துணிபு. எத்துணைப் பெரியராயினும், கடவுளுடைய எண்ணத்திற்கு மாறுபட்ட ஒரு சிறிய காரியத்தையும் செய்து முடிக்க இயலாது. இயலுமாயின், கடவுளென ஒருபொருள்வேண்டப்படுவதேயில்லை. கடவுளில்லையாயின் அரசனென ஒருவனில்லாத விடத்து, ஒவ்வொருவரும் தாம் தாம் அரசனெனச் செருக்குற்றுப் போர் புரிந்து மாண்டுபோவர்; அதுபோல அனைவரும் அடங்காமை மேற்கொண்டு துன்புறுவர். ஆகையால் கடவுள் இன்றியமையாது வேண்டப்படும். ஒவ்வொருவரிடத்தும் தம் எண்ணத்திற்கு மாறான துன்பஅநுபவம் காணப்படுதலாலும் தம்மால் எண்ணப்படாத இன்பம் அநுபவிக்கப்படுதலாலும் இவற்றை ஊட்டுவித்தற்குத் தம்மின் வேறான ஒரு பொருள் வேண்டப்படுமென்பது துணியப்படுமாதலாலும், அப்பொருளாகிய கடவுள் உண்டென்பது துணியப்படும். கடவுள் வழிபாட்டின் முன்னேற்றமே சமயமுன்னேற்றம். ஆகையால் ஒவ்வொருவரும் தம்முடைய எண்ணம் இடையூறின்றி முற்றுப் பெறுதற்குக் கடவுள் வழிபாடாகிய சமயமுன்னேற்றத்தில் கண்ணுங் கருத்தும் உடையாராதல் வேண்டும்.

கடவுள், சொரூப நிலையாகிய உண்மை நிலையில் ஒன்றே யெனினும், தடஸ்த நிலையாகிய பொதுநிலையில் பலவாகும். இது, அசசக்தி உண்மையில் ஒன்றாயினும், பொதுவில் மந்திரி முதலியன

-வாய்ப் பலவகையாதல் போலும், மந்திரிமுதலிய சத்திகளை மேற்கொண்டு தொழில் செய்பவர் குடிகளாதல்போல, கடவுளுடைய பலசத்திகளை மேற்கொண்டு தொழில் செய்பவர் உயிர் வர்க்கத்தினரேயாவர். குடிகளுள்ளும் அதிகாரிகளைச் சந்தித்து உரையாடும் உரிமை ஒன்று போலில்லை. காவற்றொழில் செய்பவனைச் சந்தித்து உரையாடும் உரிமை ஊரார்னைவருக்குமுண்டு. மேலுள்ள அதிகாரிகளைச் சந்தித்து உரையாடும் உரிமை அவரவர் தகுதிக் கேற்றவாறு சிற்சிலருக்கிருக்கின்றன. அரசனைச்சந்தித்து உரையாடும் உரிமை மிகச்சிலருக்குத்தானிருக்கிறது. இங்கே தகுதியென்பது செல்வப் பெருக்கின் வேறுபாடு. இவ்வாறே கடவுளை வழிபடும் உரிமையும் உயிர்களின் தகுதிக்கேற்றவாறு பலதிறப்படும். இங்கே தகுதி என்பது அறிவுவேறு பாட்டிற்குரிய வகுப்பு வேறுபாடு. வகுப்புக்கும் அறிவிற்கும் சம்பந்தம் உண்டென்பது பற்றியே 'குலத்தளவேயாகும் குணம்' என்றனர் பெரியார்.

சிலவகுப்பினர் உண்மையான சீவகாருண்யத்தை இயல்பாக உடைய சுத்தராவர். சிலவகுப்பினர் இயல்பாகவே சீவகாருண்யமில்லாத அசுத்தராவர் இவ்விருதிறத்தினரும் சிற்சில வேறுபாட்டால் பலதிறப்படுவர். இயல்பாகவே சீவகாருண்யமுடைய வகுப்பார் கடவுளுடைய உண்மை நிலை பொது நிலைகளை உணர்ந்து வழிபடுதற்குரியர். ஏனையோர் கடவுளுடைய பொது நிலைகளை மட்டும் வழிபடுதற்குரியர். ஆகவே, சமயமும் சாதியும் சம்பந்தம் உடையனவென்பது பெறப்பட்டது. இககருத்துப்பற்றியே சமய நூலாகிய சிவஞான சித்தியாரில், 'தரையினில் கீழை விட்டுத் தவஞ்செய்சாதியினில் வந்து, பரசமயங்கட் செல்லாப் பாக்கியம் பண்ணுஞ் ஞானத்தே' எனவும், 'அரசனருளாவிக்தப் பார்மேல், நாட்டிய நற்குலத்தினில்வந்தவதரித்துக் குருவால், ஞானநிட்டையடைந்தவர் நாதன்றாளே' எனவும் ஸ்ரீ அருணந்திசிவாச்சாரியர் அருளிச்செய் வாராயினர்.

இன்னும், சுவாமியின் திருமேனியைத் தீண்டிப் பூசித்தற்கு ஆதிசைவ அந்தணரும், மந்திரம் சமர்ப்பித்தற்கு மகா சைவப்பிராமணரும், அபிஷேக தீர்த்தங் கொண்டு வருதற்கு அதற்குரிய பிரா

மணரும், தேவாரம் பாடுதற்கு ஓதுவாரும, வாத்தியம வாசித்தற்கு மேளகாரரும் உரியரென்னும விதியாலும், அனுட்டானத்தாலுமசமயம், சாதியோடு சம்பந்தமுண்டெயதென்பது அறியப்படும்.

தேசமுன்னேற்றம் ஒன்றே கருதுபவருள் பலருக்கு இவ்வுண்மை தெரியாது. சிலருக்குத் தெரியினும் கலியின் வலிமையால் தாழ்ந்தவர்கள் கட்டுக் கடங்காது செருககுற்றுத் திரிதல் காரணமாக அவர்களும் மாறுபடக் கூறுகின்றனர். இனி, தற்காலத்தில் சமய முன்னேற்றங்கருதி கூட்டங்கூட்டுபவர்களுக்கும் சொற்பொழிவு செய்பவர்களுககும, உயர்ந்தாரைத் தாழ்த்த வேண்டுமென்பதே உட்கருத்தாதலின, தாழ்ந்தவரை உயர்த்துதலென்னும் போர்வை மருட்டமிட்டு அவர்களும மாறுபடக் கூறுகின்றனர். எவர் கூறினும் எனனும். உண்மையை மறைக்க ஒருவராலும ஒருகாலத்தும் முடியாது.

அரசனைச்சந்தித்து உரையாடும்உரிமை சிலருக்கிருத்தல்போல கடவுளுடைய உண்மை நிலையை உணர்ந்து வழிபடும உரிமை, "உயர்ந்த வகுப்பினராகிய அந்தணர், அரசர், (தமிழரசர்) வணிகர், வேளாளரென்னும் நால்வருக்கும் உண்டு; அரசனைச் சந்தித்தற்கு ஏதுவாகிய செல்வப் பெருக்குடையார் செல்வத்தை யிழந்த காலத்து அதனாலுண்டான பெருமைகளையும் இழப்பது போல, உயர்ந்த வகுப்பினர் தமது ஒழுக்கத்தை யிழந்த காலததுத் தமக்குள்ள பெருமையினையும இழந்து தாழ்ந்தவராவர். தாழ்ந்த வகுபபினர் உயர்ந்த வகுப்பினர்க்குரிய வழிபாட்டை விரும்பின் தத்தம் வகுப்பின முறையைக கடவாது திருநாளைப்போவார் போல வழிபடல் வேணடும். இவ்வாறு கடவுளை வழிபடும சமயமுன்னேற்றம இன்றியமையாததுபோல, சாதிமுன்னேறறமும இன்றியமையாததாகும.

சாதிமுன்னேற்றமாவது, சாதியபிமானத்துடன் அந்த அந்தச் சாதியிலுள்ளாரனைவரும சுகமாய் வாழ்தற்கு வேண்டுவன செய்தல். அபிமானமாவது தமக்குரிய ஒழுக்கத்தில் பற்றுடைமையும், மாறான ஒழுககத்தில் விருப்பமின்மையுமாகும. இவ்வளவேயன்றிச் செருக்குற்றால் அபிமானமாகாது. சாதியபிமானம் இல்லையாயி

ன் சமயாபிமானம் இல்லையென்பது துணிபு. சமயாபிமானம் இல்லையாயின் செய்யப்படுஞ் செயல்களனைத்தும் முற்றுப்பெற்றுப் பயன்றரமாட்டாவென்பதும் துணிபு. இந்தியா செழித்தோங்கி வளம்பெற்றிருந்த முற்காலத்து இந்தியர்கள் சாதியபிமானம் சமயாபிமானத்தில் முற்பட்டிருந்தனரென்பது சிந்திக்கத்தக்கது.

மொழி முன்னேற்றமாவது, தமது மொழியிலுள்ள நூல்களையும் உரைகளையும் பயிலல்; பயிலும்படி செய்தல் பிறமொழிகளிலுள்ள புதியபொருள்களைத் தமதுமொழியிலாக்கல் முதலியனவாய்ப் பலதிறப்படும்.

தேசமுன்னேற்றமாவது, தேசத்திலுள்ளாரனைவரும் வருமையின்றிவாழ்தற் பொருட்டுக் கைத்தொழில் முதலியவற்றை விருத்திசெய்தல்; வரிமுதலியன அதிகமாயிருப்பின் குறைக்கும்வண்ணம் அரசரை வேண்டிக்கொள்ளல் முதலியனவாய்ப் பலதிறப்படும்.

தேச முன்னேற்றத்திற்கு வகுப்பு வேற்றுமையின்றி அனைவரும் ஒத்துழைத்தல் வேண்டும். வகுப்புவேற்றுமையின்மையாவது, உயர்ந்த வகுப்பினர் செருக்குறாமல் தாழ்ந்த வகுப்பினரோடு அன்புடன் உறவாடலும் தாழ்ந்த வகுப்பினர் உயர்ந்த வகுப்பினர் நிலையைப் பெறவேண்டுமென்று செருக்குற்று அவரோடு போராடாது உறவாடலுமாம். இவ்வளவேயன்றி வகுப்பேயில்லாது ஒழித்தலன்று. அவ்வாறு ஒழித்துவிடவும் இயலாது. ஒழிக்க முயலுபவர் கேடுவிளைத்துத் தேசத்தை அழிக்கமுயலுபவரேயாவர்.

ஒருதேசத்தில் பலமொழிகளும் பலவகுப்புக்களும், பலசமயங்களுமிருக்கும். ஆகையால் அவரவர் மொழியிலும் வகுப்பிலும் சமயத்திலும் அபிமானத்தை வைத்துக்கொண்டு மேற்கூறியவாறு தேசமுன்னேற்றத்திற்கு ஒத்துழைத்தல் முறைமையாகும்.

தேச முன்னேற்றத்திற்காக வகுப்பு வேற்றுமையை அழிக்க எண்ணுபவர் சமயத்தை அழிக்க எண்ணுபவராவர். இவ்விரண்டையும் அழிக்க எவராலும் இயலாது. அழித்துவிடவேண்டும் ஒழித்துவிட வேண்டுமென்று வெறும் வாய்ப்பறை யறைபவர், கடவு

ள் உண்டென்னும் சமயப்பற்றின்றித் தேசமுன்னேற்றத்திற்குப் பாடுபடுவது போல நடித்துத் தாமுங் கெட்டுப் பிறரையுங் கெடுப்பவராவர். கடவுள் துணையைக்கொண்டு செய்யப்படும் எந்தக்காரியமும் எளிதில் முற்றுப்பெறும். கடவுள் துணையைப்பெறுதற்குச் சாதிப்பற்றுவேண்டும்.

ஆகையால் ஒவ்வொரு வகுப்பாரும் தத்தம் வகுப்பு முன்னேற்றங் கருதி வேண்டுவன செய்தல் முறையாதலின் "வேளாளன்" பத்திரிகை வேளாளர் சமுகமுன்னேற்றத்தையும், அதனால் சமய முன்னேற்றம் தேச முன்னேற்றங்களையும் விளைவிக்குமென்பது திண்ணமாதலின், அவசிய மாத்திரமன்று; நன்மை விளைவிப்பதும் அனைவராலும் வேண்டத்தக்கது மாகும்.

---

## நன்னிலவள்ளி அல்லது நங்கையினடக்கம்.

ஈழநாடு,—ஸ்ரீமதி. செல்லம்மாள் அவர்கள்.
(முன் 2-வது பத்திரிகைத் தொடர்ச்சி)

வள்ளி நீ சொல்லியவைகளனைத்தும் பொருத்தமுடையதே. அடக்கமான வாழ்விலுனக்குள்ள ஆர்வத்தையும் தெரிந்துகொண்டோம். ஆனால் பெரியவீடு கட்டி வாழ்ந்தும், உயர்ந்த ஆடையாபரணாதிகளணிந்தும், வண்டிவாகனங்கள் வைத்தும் பணியாட்கள் நியமித்தும் வாழ்ந்து வருபவர்களைத்தானே உலகம் மதிக்கிறதென்று கூறினார்கள்.

இதனைக்கேட்ட வள்ளி உலகம் மதிக்கிறதற்காகத்தான் இவைகளை வைத்துக்கொள்ளவேண்டுமென்று நீங்கள் எண்ணினாலது தவறு. உலகம் உயர்ந்தோர் மாட்டு என்பது நூல் வழக்கு. உயர்ந்தோர் இவைகளைக்கொண்டு மதிப்பாக நினைக்கமாட்டார்கள். நன்னடக்கையைக் கண்டுதான் மதிப்பார்கள். உதாரணமாக மேற்கூறியவைகளனைத்தும் ஒருவருக்குக் கிடைக்கப்பெற்றிருந்தாலும்

அவர் இழிந்த குணமுடையவராயும், தீயசெயலுடையவராயுமிருந்தால், யார்தான் அவரை மதிப்பார்கள்.

மேலும், பெரியவீடு கட்டிக்கொள்ளக்கூடாது, வேலையாட்கள் வைத்துக்கொள்ளக்கூடாதென்று நான் சொல்வதாய் நீங்கள் தவறாக நினைத்துவிடக்கூடாது.

"மக்களுக்கிரங்கிவாடு மடத்தகை மணங்குங்கேட்டி
தக்க முற்பவத்திலான்ற தருமநன் கியற்றினோர்க
ளொக்கவிப் பவத்தி லின்ப மொருங்கனுபவிப்பர்"

என்னும் குசலோபாக்கியான செய்யுளுக்கேற்ப அவரவர்கள் செய்த நல்வினைக்கீடாய் எல்லாம் வல்ல இறைவன் பொன்னும் மணியும், பொருளும், பிறவும் கொடுத்தருளுகின்றான். இதனை யடையப்பெற்றோர் தங்கள் தகுதிக்கேற்றவாறு உயர்ந்த வீடுகள் கட்டியும் விலையுயர்ந்த ஆடையாபரணாதிகளணிந்தும் பணியாட்கள் வைத்தும் வாழ்ந்து வருகின்றார்கள். இவைகள் பொருத்தமுடையதே. பிறராக்கங்கண்டு பொறாமைகொள்ளும் சிற்றினத்தாரே தங்களுக்குத் தோன்றியவாறு யாரையும் வசைமொழிகள் கூறுவர். மேலும் தத்தம் தகுதியினேற்றத்திற்கேற்ப ஒருவன் வாழ்ந்துவாராவிட்டாலும் கொடுத்துவையாதவனென்றும் இவன் மகா லோபியென்றும் பலரும் குறைகூறுவர். ஆனால் நானிவர்களைப்பற்றியெல்லாம் ஒன்றும்பேச முன்வரவில்லை. என்மீது அநுதாபப்பட்டு நீங்கள் சொல்லியதற்காகச்சிலவற்றைச் சொல்லுகிறேன். நாம் பிறந்த வீட்டினியல்பு எத்தகைய சிறப்புடையதாயிருந்தாலும் நாம் புகுந்த வீடாகிய நமது கணவன் வீடே நமக்குச் சிறப்புடையது. நமது கணவர் வீட்டு நிலைமைக்கேற்பவும், வருவாய்க்குத் தக்கபடியும்தான் நமது வாழ்க்கையை செட்டாய் நடத்திக்கொண்டுபோகவேண்டும். இதைக் குறிப்பிட்டுத் தான் இவ்வளவும் கூறுகிறேன். நாம் பிறந்த இடத்தையே பெரிதாய் நினைத்தும், அல்லது பக்கத்து வீட்டுக்காரரெல்லாம் அப்படி வாழ்கின்றார்களே, நாமும் அதுபோலிருக்க வேண்டுமென்று நினைத்தும் அவர்கள் வீட்டில் உயர்ந்த துணிமணிகள் நகை நாணயங்கள் பாத்திர பண்டங்கள் வாங்கியிருப்பதுபோல் நாமும் வாங்

கிவிடவேண்டுமென்று துணிந்தும் அவர்கள் வீட்டில் நடத்திய கலியாண விசேடங்களைப் பார்க்கிலும் ஒரு மடங்கு அதிகமாய் நாம் நடத்திவிடவேண்டுமென்று கருதியும் வாழ்க்கையை நடத்த ஆரம்பித்தால், வரவுக்குமிஞ்சிய செலவுக்கு நாமே இடங்கொடுத்து, வாழ்க்கைத் துணைவருக்கும் பல இன்னல்களை யுண்டாக்கியவர்களாகிவிடுவோம். உதாரணமாக ஒருவர் தனது மனைவியின் விருப்பத்திற்கேற்ப தமது தகுதிக்கு மிஞ்சிய ஓர் வீட்டைக் கட்டிக் கொள்கிறார். காலபேதத்தால் நிலைமை மாறவே, அப்பெரிய வீட்டிற்கு வேண்டிய விளக்குகள் போட்டுக்கொள்ளவோ பழுது பார்க்கவோகூட சக்தியில்லாதவராயிருந்து நாளடைவில கடன் தொந்திரவினிமித்தம் வீட்டையுமிழந்து கஷ்டப்படுகிறார். அப்பொழுது அவரது மனம்படுகிற பாட்டைச் சொல்லமுடியுமா. எவ்வளவு செலவழித்து, எவ்வளவு சிரமப்பட்டு, என்ன அழகாய் கெட்டி முடித்தோமென்று பெரிதும் வருந்துகிறார். 'சாதாரணமாயுள்ள வீட்டுக்காரனே இதுபோன்றில்லாது பெரிய மாளிகை தான் போய்விட்டதாக்கும், இதுபோனால் இன்னொன்று என்று ஏதோ சமாதானம் செய்துகொள்கிறான். இவைகளை யெல்லாம் நோக்கியே நமது ஒளவைப்பிராட்டியும் "இடம்பட வீடெடேல்" என்று கூறியுள்ளாள். நாட்டுக்கோட்டைநகரத்தார்களுக்குள் ஒரு வழக்கமிருந்துவருகிறது. அதாவது தங்கள் வீட்டில் கலியாண முதலிய விசேடங்கள்வந்தால் விசேடத்திற்கு வந்தவர்களத்தனை பேருக்கும் தன் வீட்டிலேயே படுக்கை இடம் வசதி செய்துகொடுக்கவேண்டுமாம். பிறவிடங்களுக்குச்சென்றால் அது ஒருமதிப்பு குறைவாம். இதையுத்தேசித்து பெரியவீடுகட்டுகிறார்களாம். இது பொருத்தமுடையதாயில்லை. விசேடகாலந்தவிர மற்றக்காலங்களில் பழக்கத்திலில்லாததால் தூசியடைந்தும், இருளடைந்தும், துஷ்டஜந்துக்கள் வாசஸ்தலமாயும் பாழ்பட்டும் கிடக்கின்றது. இத்தகைய வீடுகளும் அவரவர்களது சொந்த விசேடங்களுக்குத்தான் உபயோகப்படுகிறதே தவிர பொதுக்காரியம் ஒன்றை நடத்தவும் பயன்படுவதில்லை. அதற்கேற்ற அமைப்போடு இடமுமிருப்பதில்லை. இத்தகைய விசேட வசதிகளுக்கும் பிறவற்றிற்குமாக பொது நிலயம் ஒன்றையமைத்து வைத்திருந்தால் பொதுக்காரி

புக்கள் நடைபெறுதற்கும், பலருக்கும், பல சமயங்களில் பயன் படும். இந்தச் சந்தர்ப்பத்தில் நான் எனது வீட்டைப்பற்றி கொஞ்சம் பெருமையாய்ப் பேசிக்கொள்ள வேண்டியதிருக்கிறது. இது சிறிய வீடாயிருந்தாலும் காற்றும் வெளிச்சமும் போதுமா னபடி வருதற்கேற்ற முறையோடு கட்டப்பட்டிருக்கிறது.

(தொடரும்.)

---

# குறிப்புகள்

## நன்கொடை.

கமிஷன் ஏஜெண்டு திரு. இராமையாபிள்ளையவர்கள் மூத்த மகள் திருவளர் செல்வி—சீதா லெட்சிமியம்மாளை சப் அஸிஸ்டெண்டு சர்ஜன் திரு. ரெங்கசாமிபிள்ளைக்கு கலியாணஞ்செய்துகொடுத்ததின் பொருட்டு நமது வேளாளனுக்கு ரூ. 5-0-0 நன்கொடை கொடுத்து தவப்பெற்றோம். மணமக்கள் பலபேறு பெற்று பல்லாண்டு வாழப் பரமன் அருள்பாலிப்பானாக. பிள்ளையவர்களைப்போல் மற்றக்கனவான்களும் நன்மை தீமைகளின் பொருட்டு வேளாளன் நலங்கருதி நன்கொடை கொடுத்து தவவேண்டுகின்றோம்.

## நீதியற்ற நிர்வாகம்.

தூத்துக்குடியில் சாசுவதமாக ஒரு சினிமாக் கம்பெனி நடந்துவருகிறது. தற்காலியமாக ஒரு சினிமாக் கம்பெனியும் நடைபெற்று வருகிறது. தற்காலியமாக நடக்கும் சினிமாக்கம்பெனியாருக்கு நகர சபை சுகாதார உத்தியோகஸ்தர் லைசென்ஸ் கொடுக்க மறுக்கின்றனர். காரணம் காலரா எனக் கூறுகின்றனர். காலராக் காரணமென்றால் இரு கம்பெனியாருக்கும் லைசென்ஸ் கொடாமலிக்கவேண்டும். ஒருவருக்குக் கொடுத்து, ஒருவருக்குக் கொடுக்கமறுப்பது நீதியற்ற நிர்வாகமாவதோடு, பொது மக்கள் சுகாதார உத்தியோகஸ்தரைத் தாட்சண்ணியப்பட்டனரென்றோ அல்லது பிரதியுபகாரங்கருதினரென்றோ சந்தேகிப்பதற்கு இடமேற்படுகின்றது. இனியேனும் இத்தகைய சந்தேகங்களுக்கு இடங்கொடாமல் நடந்துகொள்வாராக.

## வேளாளர் பிரஸ்.

நமது வேளாளனை வெகு சிரமத்துடன் நான்கு மாதங்களாக நடத்திவருகின்றோம். பத்திரிகை நடத்துவதற்கு இன்றியமையாத

வேண்டப்படும் வசதிகள் பலவிருப்பினும் அவற்றுள் மிகமுக்கியமானது அச்சுக்கூடவசதியேயாகும். தற்பொழுது நமது பத்திரிகையை அச்சடித்துக் கொடுக்கும் அருணோதய அச்சுக்கூட அதிகாரி நமது நண்பர்-திரு. J. P. ரொட்டிரிகஸ் அவர்கள் நமக்கு வேண்டும் வசதிகள் செய்துகொடுத்தும் இன்னும் செய்துகொடுக்கவும் தயாராகயிருக்கிறார்கள். என்றாலும் அச்சுக்கூடவேலைகளில் அதிகப் பழக்கம் அவர்களுக்கில்லாமையாலும் பழக்கமுடையவருக்கு நிர்வாகத் திறமை போதாததாலும் வேளாளன் வேலை செவ்வனே நடைபெறமுடியவில்லை. நிர்வாகத் திறமைக் குறைவால் நமக்கும் நமது ரொட்டிரிக்ஸ் அவர்களுக்கும் ஏற்படும் கஷ்ட நஷ்டங்கள் பல. இவைகளை யனுபவிக்கும் இருவர்களும் மனப் பூர்வமாகச் சமாதானத்துடன் விலகிக் கொள்ள வேணுமென்றே கருதுகின்றோம். எனினும் இவ்வளவு பெரியநகரில் பத்திரிகையடிப்பதற்கு வசதியான அச்சுக்கூடங்களில்லை. இருக்கும் இரண்டொரு அச்சுக்கூடத்தாரைக் கேட்டதில் வசதியான முறையில் ஏற்றுக் கொள்ளத் தயங்குகின்றார்கள். என்செய்வது! பிற பல கஷ்டங்கள் ஒரு பங்கு அச்சுக்கூடக் கஷ்டங்கள் பலபங்கு. இவைகளையுத்தேசித்தும் வேளாளர்களின் கூட்டுறவை யுத்தேசித்தும "வேளாளர்பிரஸ்"என்றபெயருடன் ஒரு அச்சுக்கூடம்அமைப்பதின்பொருட்டு பங்கு ஒன்றுக்கு ரூபாய் பத்துவிதம் ஆயிரம்பங்குகள்சேர்த்து பதினாயிர ரூபாய்க்கு ரிஜிஸ்டர் செய்து லிமிட்டெட் கம்பெனியாக நடத்தக் கருதியுள்ளோம். ஆகையால் கனவான்களெல்லாம் பங்காளிகளாகச் சேர்ந்து ஆதரிக்கும்படி வேண்டுகின்றோம். பங்காளிகளாகச் சேர்ந்து ஆதரிக்க ஆர்வமுடைய கனவான்களெல்லாம் நமக்குத் தெரிவிக்கும்படி விரும்புகின்றோம.

## வேண்டுதல்

நேயர்களே! நான்கு மாதங்களாகப் பல கஷ்ட நஷ்டங்களினிடையே நமது வேளாளனை நடத்தி வருகின்றோம். தங்கள் சந்தாதொகைகளை மணியார்டர் மூலம் அனுப்பி யாதரிக்கும்படி பல முறை எழுதியும் இதுவரை சிலர் தவிர மற்றயவர்களெல்லாம் அனுப்பினார்களில்லை. ஆதலால் இது முதல் எல்லோருக்கும் வி. பி. பியில் அனுப்பக் கருதியுள்ளோம். நேயர்களெல்லாம் வி. பி. பில் பணத்தைக் கட்டி அன்புடன் ஆதரிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறோம் வி. பி. பியைப் பெற்றுக் கொள்ளாமல் திருப்பி விடுவீர்களானால் நமக்கு மிகுந்த நஷ்டமும் கஷ்டமும் ஏற்படும் என்பதைத் தாழ்மையாக ஞாபகஞ் செய்கின்றோம.